

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.08.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய முஸ்லீம் தனிநபர் சட்ட வாரியத் தின் பொதுச் செயலாளர் முகமது ஃபஸ்லுர் ரஹீம் முஜாதிதி, தமிழ்நாடு ஜமாத்துல் உலமா பேரவை தலைவர் காஜா மொஹிநுதீன் பக்வி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பாக சந்தித்துப் பேசினார்கள். இந்த சந்திப்பின் போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலாளர் சி.விஜயராஜ் குமார், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) தாரேஸ் அகமது, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் உறுப்பினர் திருமதி ஏ.எஸ்.பாத்திமா முசாபர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 324 அடுக்குமாடி குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் உட்பட பலர் உள்ளனர்.

மருத்துவத் துறையில் 1474 பேருக்கு பணி நியமன ஆணைகள்! பணி நியமனம் பெற்றவர்கள்

# இந்த நல்லாட்சியின் தூதுவர்களாகச் செயல்படுங்கள்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரை!



சென்னை, ஆக.22-

முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்துறையில் 1474 பணிநியமன ஆணைகளை வழங்கினார். பணி நியமனம் பெற்ற நீங்கள் இந்த நல்லாட்சியின் தூதுவர்களாக (Ambassador) செயல்பட வேண்டும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் அவர்கள், நேற்று (20.08.2024), சென்னை, தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில், 1474 பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை கலைவாணர் அரங்கத்தில் மீதமுள்ள அனைவருக்கும் பணி நியமன ஆணை வழங்கி விழா பேரூரையாற்றினார்.

அவ்வுரை வருமாறு :

### 1474 பேருக்கு பணிநியமன ஆணை வழங்குதல்

மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல்வேறுதிட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒவ்வொரு நாளும் நல்ல நாள் தான். 2021 ஆகஸ்ட் 5 அன்று மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டம் தொடங்கப்பட்டது.2021 டிசம்பர் 18 ஆம் நாள் தொடங்கப்பட்ட இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம் தொடங்கப்பட்டது மகிழ்ச்சிக்குரிய ஒன்று 27.06.2022 அன்று இதயம் காப்போம் திட்டம் தொடங்கப்பட்டது. மேலும் பாதம் காப்போம், செயற்கை கருத்தரித்தல், மக்களைத் தேடி ஆய்வகம் திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் போன்று திட்டங்கள் தொடங்கப்பட்ட நாள் இத்துறைக்கு மகிழ்ச்சியும், பெருமையும் கொண்ட நாட்களாகும். அதேபோல் இன்று 1474 பணிநியமன ஆணைகள் வழங்கும் இந்நாளும் இத்துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். முதலமைச்சர் அவர்கள் சென்னை, தலைமை செயலகத்தில் 7 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, 1467 பேரையும் காணொளி வாயிலாக கண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் ஏற்கெனவே 1021 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. 977 செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் கலந்தாய்வு நடத்தி பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடக்காத ஒன்று. இந்நிகழ்வில் 946 மருந்தாளுநர் பணியிடங்களும், 553 உதவியாளர் பணியிடங்கள், 5 தொழில்வழிகாட்டி ஆலோசகர் பணியிடங்கள் என 1474 பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மருந்தாளுநர்களைப் பொறுத்தவரை மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாள் பத்திரிக்கைகளில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, தேர்வுகள் நடத்தி, சான்றிதழ்கள் சரிபார்ப்புகள் நடத்தி பல்வேறு நீதிமன்ற வழக்குகளை கடந்து ஒரு இமாலய சாதனையாக இப்பணி நியமன ஆணைகள் தரப்பட்டுள்ளது.

### பணியிடமாறுதல் தொடர்பாக அறிவுரை

பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு அவரவர் சொந்த பகுதிகளிலேயே பணிநியமனம் வழங்கப்பட வேண்டும் என்பது தான் எங்களது கொள்கை. ஏனெனில் அப்போதுதான் அவர்கள் முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள். அவர்கள் சொந்த பகுதியில் காலியிடம் இல்லாத பட்சத்தில் கிடைக்கும் இடங்களுக்கு பணிநியமனம் பெற்றுச் செல்ல வேண்டும். ஆனால் இதனைப் பொருட்படுத்தாமல் காலை 5 மணிக்கு எல்லாம் பணியிட மாறுதல் வேண்டி எனது முகாம் அலுவலகத்தில் வந்து காத்துக் கொண்டு இருக்கிறார்கள். இடமாறுதல்கள் துறை தலைவர்கள் மூலமாகத்தான் செல்ல வேண்டும், அமைச்சரிடம் நேரிடையாக வரக்கூடாது என சுற்றறிக்கை அனுப்புமாறு சம்பந்தப்பட்ட இயக்குநர் அவர்களிடம் தெரிவித்து அவர்களும் அதற்கான சுற்றறிக்கையினை அனுப்பியிருக்கிறார்கள். மேலும் எனது அலுவலகத்தில் இடமாற்றம் தொடர்பாக யாரும் என்னை சந்திக்க வரக்கூடாது என்று அறிவிப்பு பலகையும் வைத்து விட்டேன். இதனையும் மீறி யாரையாவது அழைத்துக் கொண்டு நிறைய பேர் வருகிறார்கள், நீங்களும் வந்திருக்கிறீர்கள், என்னால் இங்கு ஒரு 50 பேரை கைகாட்ட முடியும். எங்களுக்கு தெரிந்தவர்களை உடன் அழைத்துக் கொண்டு இடமாற்றம் கோரி எங்களுக்கு நெருக்கடி தருகிறீர்கள், இது நியாயமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். மேலும் மருத்துவத்துறை இயக்குநர்கள் அவர்களிடம் காலிப்பணியிடம் விவரம் கோரப்பட்டுள்ளது, இதில் 90% பணியிடங்கள் நிரப்பப்பட்ட பிறகு மீண்டும் உங்களுக்கு கலந்தாய்வு நடத்தி நீங்கள் விரும்பும் இடங்களுக்கு செல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகிறோம். அதுவரை நீங்கள் யாரும் பணியிடமாறுதல் கேட்க கூடாது, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 1021 மருத்துவர்கள் யாரும் பணியிடமாறுதல் கேட்கவில்லை. நீங்கள் ஒரு வருடத்திற்கு பணியிடமாறுதல் கேட்க கூடாது என்கின்ற மனநிலைமைக்கு வர வேண்டும். அதையும் மீறி எங்களுக்கு தெரிந்தவர்கள் மூலமாக எங்களுக்கு நெருக்கடி கொடுக்க நினைத்தால் 17(b) போன்ற துறைரீதியான நடவடிக்கைகள் நிச்சயம் நாங்கள் எடுப்போம். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் சொல்லியிருப்பது போல் நீங்கள் இந்த துறையின் Ambassadorகள், இந்த நல்லாட்சியின்தூதுவர்கள் நீங்கள், பெரிய அளவிலான அலைச்சல்கள் இல்லாமல், சிபாரிசு இல்லாமல், என்னுடைய தகுதியின் அடிப்படையில் வேலைக்கு வந்திருக்கிறேன், என்னுடைய திறமையின் அடிப்படையில் வேலைக்கு வந்திருக்கிறேன், என்னுடைய உழைப்பின் அடிப்படையில் வேலைக்கு வந்திருக்கிறேன், என்னுடைய கல்வி தகுதியின் அடிப்படையில் வேலைக்கு வந்திருக்கிறேன், எனது பெற்றோர் செய்த தவம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித்தந்திருக்கும் ஒரு வரப்பிரசாதம். எனவே யாரிடமும் செல்லாமல் பணியிடமாறுதல் கேட்டு வரமாட்டேன் என உறுதிமொழி ஏற்று செல்ல வேண்டும்.

இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு வழங்கப்பட்டுள்ள பணியிடங்கள்

மேலும் இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு 4215 பணியிடங்களுக்கு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 1055 என ஆக மொத்தம் 5670 பேருக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று புதிததாக 1474 பேருக்கு பணிநியமன ஆணைகள் தரப்பட்டுள்ளது. வெளிப்படையான கலந்தாய்வு அடிப்படையில் இதுவரை 36,465 பேருக்கு பணியிடமாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டுள்ளது. இன்னமும் 1066 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளது. ஆனால் இப்பணிகளுக்கு நீதிமன்றத்தில் இதுவரை 38 வழக்குகள் நிலுவையில் உள்ளது. அந்த வழக்குகளை போட்டவர்களை நான் கேட்டுக் கொள்வது இந்த வழக்குகளை நீங்கள் முடித்துவிட்டால் 1066 பேருக்கு வாழ்க்கை கிடைக்கும். மேலும் 2250 கிராம சுகாதார செவிலியர்கள் பணியிடங்களுக்கு உச்சநீதிமன்றத்தில் 6 வழக்குகள் உள்ளது. வழக்குகளை போட்டவர்கள் துறையின் செயலாளர் அவர்களை சந்தித்து பேசுங்கள், உங்களுக்கு தேவையான உரிமைகள் என்ன செய்ய முடியுமோ அதனை நிறைவேற்றித் தர தயாராக உள்ளார்கள். அந்த 6 வழக்குகளுக்கு தீர்வு கிடைத்துவிட்டால் 2250 பெண்களின் வாழ்வில் விளக்கேற்றி வைக்கப் படும். மேலும் இந்த ஆண்டிற்கான 2,553 மருத்துவர்களுக்கான விண்ணப்பங்கள் அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு தேர்வுகள் நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இத்துறையின் செயலாளர் கூறியதைப்போல் நீங்கள் இந்த நல்லாட்சியின் தூதுவர்களாக செயல்பட வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஜெ.இராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி மற்றும் மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் மாவட்டச் செயலாளரும், முன்னாள் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினருமான நா.புகழேந்தி பிறந்தநாளையொட்டி அவரது சொந்த ஊரான அத்தியூர் திருவாதி ஊராட்சியில் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய செயலாளர்கள் தே.முருகவேல், க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, கல்பட்டு வி.இராஜா, ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, கோத.குமார், நகர செயலாளர் இரா.சக்கரை, பா.ஜீவா, தொ.மு.ச.சேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், அவைத் தலைவர் ராமகிருஷ்ணன், தேவகிருஷ்ணன், ஒன்றிய துணை செயலாளர் கலியமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி சடகோபன், கிளை செயலாளர் மு.ராமதாஸ், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

விழுப்புரம் செஞ்சி ஒன்றியத்தில்

# ரூ.6 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி -செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஆக. 22-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள் ஊராட்சியில்சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு 1200 நபர்களுக்கு 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:

எங்களுடைய எஜமான்கள் வாக்காளர்களாகிய நீங்கள் தான், உங்களுடைய ஆதரவுடன் இன்று முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் ஆட்சி பொறுப்பேற்று கோட்டைக்கு சென்றவுடன் முதலமைச்சர் முதல் கையெழுத்து திட்டது பெண்களுக்கு கட்டணம் இல்லா பேருந்து பயணம்.

தொடர்ந்து மகளிர் உரிமைத்தொகை திட்டம் போன்ற தொலைநோக்கு சிந்தனையுடன் என்னற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மேலும் உங்களுடைய ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகள் உயர்கல்வியில் தடை இன்றி படிப்பதற்கு புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ஒரு மாபெரும் திட்டத்தை தொடங்கிவைத்துள்ளதாக அவர் பெருமைப்பட தெரிவித்தார்.

முன்னதாக பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் தொடர்ந்து கொண்டாடப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வந்தது.

அந்த வகையில் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவை காணும் இந்த வருடத்தில் ஆண்டு முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக நல்லான் பிள்ளை பெற்றாள் ஊராட்சியில் கழக இரு வண்ண கொடியினை ஏற்றி வைத்த அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி-செஞ்சி மஸ்தான் ஆகியோர்சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு இல்லத்தில் உள்ள மறைந்தஆசிரியர் பூரேசன் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட பிரதிநிதி கதிரவன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பிரஸ் - மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியனின்

# 25வது மாநில மாநாடு குறித்த ஆலோசனைக்கூட்டம்!

## மாநிலத் தலைவர் மு.சிவதமிழவன் தலைமையில்!

திருவாரூர், ஆக.22-

தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியனின் சார்பில் இதுவரை 24மாநில மாநாடுகள் சிறப்புடன் நடைபெற்று முடிந்திருக்கிற நிலையில், இதன் 25வது மாநில மாநாடு நடத்துவது குறித்து முறைப்படி நிர்வாகி களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை அசோக்நகர் மர்ஹபா மகாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியனின் மாநிலத் தலைவர் டாக்டர் மு.சிவதமிழவன் தலைமை வகித்தார்.

மாநிலதுணைத்தலைவர் டாக்டர் ஆர்.சிவராமன், மாநிலப்பொது செயலாளர் சி.பி.ராஜன், மாநில பொருளாளர் டாக்டர் ஏ.சேகர், மாநில நிர்வாக தலைமை இயக்குனர் டாக்டர் எம். பெருமாள், மாநில இணை செயலாளர்கள் எஸ்.ஜெயராமன், தாம்பரம் வி.ஆர். ராஜூ, மாநில செய்தி தொடர்பாளர் ஏ.அம்ஜத், டாக்டர்ஜி.செல்வகுமாரன், டி.எஸ். சுயம்பு ராஜன், எஸ்.மாடபாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியனின் மாநில தலைமை சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் எம்.கே. கோவிந்தன் சிறப்புரையாற்றி ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில், 25வது மாநில மாநாட்டை எதிர்வரும் 28.11.2024 அன்று சென்னையில் சிறப்போடு நடத்துவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது, தொடர்ந்து மாநாட்டு பணிகளை மேற்கொள்ள மாநாட்டு சிறப்புக்குழுக்கள் தேர்ந்தெடுத்து அறிவிக்கப் பட்டது. தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியனின் சார்பில் இயங்கிவரும் "சட்டம் ஒழுங்கு மாதப்பத்திரிக்கை"யை தொடர்ந்து, அரசியல், காவல்துறை,புலனாய்வு சமூக வலைதளமாக "சட்டம் ஒழுங்கு - புலனாய்வு டிஜிட்டல் சேனல்" துவக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாநகராட்சி பிரகதாம்பாள் மேல்நிலைப்பள்ளியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் மு. லியாகத் அலி ஆகியோர் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கினார்கள்.மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சண்முகம், மாமன்ற உறுப்பினர் லதா கருணாநிதி, பழனிவேல், ராஜாமுகமது, ஜாஹிர் உசேன் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் இப்ராஹிம் பாபு, மாநகர அவைத்தலைவர் ரெத்தினம், வட்ட செயலாளர்கள் செல்லையா, ஆர்.எம்.சத்யா மற்றும் ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள், மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மாவட்ட ஆர்.எஸ்.புரம் பகுதி கழகம் சார்பில் பொது மக்களுக்கு அசைவ உணவு வழங்கும் நிகழ்ச்சியை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொ.அ.ரவி பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். மேயர் ரங்கநாயகி ஆர்.எஸ்.புரம் பகுதி கழக செயலாளர் கார்த்திக்செல்வராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சோமு என்கிற சந்தோஷ் பொதுக்குழு உறுப்பினர் துணைமேயர் வெற்றிசெல்வன், வடக்கு மாவட்ட பொருளாளர் ரஹ்மான்,மாவட்ட துணைச்செயலாளர் ஜெயந்தி அணிகளின் அமைப்பாளர்கள் தென்னை சிவா, தளபதி தியாகு, வட்டக்கழக செயலாளர்கள் ஜெகதீஷ்,பழக்கடை ஆறுமுகம்,நாசர் ,நவுசாத், பிரமோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்